# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2093/38 - 2018 ඔක්තෝබර් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.18

*2093/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 10/3/1/3/69.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4- 3/2/2015/ஏ/09.

விநியோகத்தர் உத்தியோக வாசஸ்தலம் தொடர்பாக வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேசிய பத்துவ சிறுபிரிவில் கழுதேவல கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. மா. 1739 இல் காட்டப்பட்டுள்ள, கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்:

*01.* **துண்டு இல. 1**

காணியின் பெயர்: சுதுகங்க வத்த; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, த. பெ.1526, இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு 07; விஸ்தீரணம்: 0.0682 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018.11.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018.11.13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

எச்.எம்.என். தினிப்பிரிய,
பிரதேச செயலாளர்,
இரத்தோட்டை.

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை,
2018.10.11

11-137


1A -G28765 - 72 (2018/10)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: BER/4/5/5/09.
காணி அமைச்சின் இல.: 4-3/6/2016/HW/179.

என் மூலம் 2018/09/10 ஆந் திகதிய இலக்கம் 2088/12 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தல் சம்பந்தமான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் வரைபடத்தின் இலக்கம் மற்றும் பரிசோதனைத் திகதி பின்வருமாறு திருத்தப்படுவதை நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

நில அளவையாளர் நாயகத்தின் க. 4707 எனும் வரைபடத்தின் இலக்கத்திற்குப் பதிலாக நில அளவையாளர் நாயகத்தின் க. 4703 எனும் வரைபடத்தின் இலக்கம் என திருத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்த வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளில் எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.ஜீ.டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2018.10.03

11-138

திருத்தம்

எனது குறிப்பு இல.: KDS/UDP/4/1/LAQ/Mor.Pro/37.
காணி அமைச்சின் இல.: 4-3/2014/CEB/422.

1988/2 ஆம் இலக்க மற்றும் 2016.10.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 300 (நில அளவையியல் வரைபட இலக்கம் (சீ.எம்) 320042 (2) 10 ஆம் இலக்கக் காணித்துண்டின் விபரம் கீழ் வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

நஷ்டஈடுகளைப் பரீட்சிக்கும் தினங்கள் மற்றும் நேரம்:

| தொடரி லக்கம் | நில அளவையியல் வரைபட இலக்கம் | காணித்துண்டு இலக்கம் மற்றும் காணித்துண்டுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | காணித்துண்டு இலக்கம் | காணித்துண்டுகளின் எண்ணிக்கை |
| 01 | சி.எம்.320042(4)02 | 348 | 01 |
| 02 | சி.எம்.320042(4)02 | 349 | 01 |

| நஷ்டஈடுகளைப் பரீட்சிக்கும் திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 2018.11.14 | மு.ப. 9.30 | கம்பளை, உடபலாத்த பிரதேச செயலகம் |
| 2018.11.14 | மு.ப. 9.30 | கம்பளை, உடபலாத்த பிரதேச செயலகம் |

ஆர்.ஏ.டீ.ரி.என்.தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த,
கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை.
2018.10.17

11-139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.